மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், தேன்கனிக்கோட்டை
முன்னிலை: திருமதி எம். மேகலா மைதிலி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01-ம் நாள் சனிக்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.01/2016</u>

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
கெலமங்கலம் காவல் நிலையம்
குற்ற எண். 491/2015 ... குற்றமுறையீட்டாளர்.

// எதிராக //

1. முரளி, வயது 20,
த/பெ. முனிகிருஷ்ணன்,
கிருஷ்ணபுரம் கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம்.
2. சீனப்பா (எ) சீனிவாஸ், வயது 40,
த/பெ. முத்தையா(எ) பசப்பா,
3. வெங்கடேசப்பா, வயது 45,
த/பெ. முத்தையா (எ) பசப்பா,
4. தொட்டனைய்யா, வயது 38,
த/பெ. முத்தையா (எ) பசப்பா,
5. கெஞ்சப்பா, வயது 25,
த/பெ. முத்தையா (எ) பசப்பா
(2 முதல் 4 எதிரிகள் வசிக்குமிடம் தொட்டபேளூர் கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம்)

...எதிரிகள்

இவ்வழக்கு 10.12.2015-ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ரவீந்திரநாத் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

கடந்த 21.09.2015-ம் தேதி காலை 08.00 மணியளவில் கெலமங்கலம் காவல் சரகம் தொட்டபேளூர் கிராமத்தின் அருகே சாட்சி 1 தனது வாகனத்தில் வந்த போது அங்கு வந்த 1 முதல் 5 எதிரிகள் அனைவரும் சேர்ந்து தகராறு செய்ய வந்ததாகவும், அதைத் தொடர்ந்து சாட்சி 1 நாகராஜை எதிரிகள் அனைவரும் தடுத்து நிறுத்தியதாகவும் மேலும் சாட்சி 1 யை எதிரிகள் அனைவரும் வண்டியை விட்டு இறங்குடா தேவடியா மகனே என்று திட்டியதாகவும், மேலும் சாட்சி 1-யை எதிரிகள் சட்டையை பிடித்து இழுத்து கையால் கன்னம், மார்பு மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் மேலும் சாட்சி 1-ஐ 1-வது எதிரி முரளி கல்லால் வலது, இடது தோள்பட்டை மீது அடித்தும், 3,4,5 எதிரிகள் தொன்னையால் இடுப்பு, இடது தொடை முட்டி மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் 1,2 எதிரிகள் இருவரும் கைகளில் தொன்னையை வைத்துக் கொண்டு இனிமேல் எங்களிடம் வைத்துக் கொண்டால் உன்னை அடித்தே கொலை செய்து

விடுவோம் என மிரட்டியதாகவும் எதிரிகள் மீது ச/பி.147,341,294(பி),323,324,506(2) உ/இ.149 IPC-ன் கீழும் குற்றம் புரிந்ததாக எதிரிகளுக்கெதிராக கெலமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றம் முன்பு ஆஜரானதும், கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளித்து வழக்காவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீது ச/பி.147,341,294(பி),323,324,506(2) உ/இ.149 IPC-ன் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டு குறித்து வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தனர். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.

<u>4. அரசு தரப்பு சாட்சியங்களின் விவரம்:</u>

(அ) அ.சா.1 திரு. நாகராஜ் தனது சாட்சியத்தில், கடந்த 20.09.2015-ம் தேதி இரவு 08.00 மணியளவில் கம்பெனியிலிருந்து டெம்போ டிரைலர் மூலம் ஊருக்கு வந்து கொண்டிருந்ததாகவும் பெண்கள் இருக்கையில் எதிரி முரளி உட்கார்ந்திருந்ததாகவும் தான் முரளியிடம் பெண்கள் இருக்கையில் உட்காராதே அருகில் உள்ள சீட்டில் உட்காரு என்று சொன்னதற்கு தான் அப்படி தான் உட்காருவேன் நீ டிரைவர் உனக்கு தன்கிட்ட என்ன கேள்வி என்று கேட்டதாகவும் பின்பு முரளி வண்டியிலிருந்து இறங்கி சென்றுவிட்டதாகவும் 21.09.2015-ம் தேதி பேளூர் ஸ்டாப்பிற்கு முன்பு ஊருக்கு உள்ளே செல்லக் கூடிய பாதையில் வண்டி வரும் போது முரளி, சீனிவாசு ஆகியோர் தேவடியா மகனே, கீழே இறங்கு என்று சொன்னதாகவும் தன்னை அசிங்கமாக திட்டி எதிரி சீனிவாசு தன் இடது கையில் அடித்ததாகவும் தனது முதுகில் தொன்னையால் முரளி அடித்ததாகவும் கெஞ்சப்பா கல்லை கொண்டு இடது பக்க இடுப்பு தொடையில் அடித்ததாகவும் தான் எழுந்து செல்லும் போது இதுவே கடைசி எச்சரிக்கை என்றும் எதிரிகள் நான்கு பேரும் சேர்ந்து தன்னை கொன்று விடுவேன் இதுக்கு மேல் ஏதாவது செய்தால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும் தனக்கு காயம் ஏற்பட்டது சம்பந்தமாக தேன்கனிக்கோட்டை மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்ததாகவும் தான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் போது போலீசார் தன்னை விசாரித்ததாகவும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட புகார் மனு தான் கொடுத்த புகார் மனு என்றும் தான் முந்தைய நாள் முரளியை பெண்கள் இருக்கையில் உட்காரக் கூடாது என்று சொன்ன காரணத்தினால் எதிரிகள் தன்னை கெட்டவார்த்தைகளால் திட்டி அடித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ஆ) அ.சா.2 திரு. சிவநேசன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் அ.சா.1 நாகராஜ் தெரியும் என்றும் சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் பேளூர் அருகில் எதிரிகள் நாகராஜ் இடம் சண்டைக்கு வந்தார்கள் என்றும் எதிரி வெங்கடேசை, சாட்சி காண்பித்து எதிரி

வெங்கடேஷ் என்பவர் தாக்கியதாக தான் பார்த்ததாக தெரிவித்தார் என்றும் அதன் பின்னிட்டு அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றதாகவும் தான் அதற்கு முந்தைய நாள் வேலைக்கு செல்லாத காரணத்தினால் என்ன நடந்தது தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(இ) அ.சா.3 திருமதி. யசோதா தனது சாட்சியத்தில், அ.சா.1,2-யை தனக்கு தெரியும் என்றும் எதிரிகளை தெரியும் என்றும் 20.09.2015-ம் தேதி வண்டியில் வரும் போது பெண்கள் உட்காரும் இடத்தில் முரளி உட்கார்ந்ததுக்கு அவரை சீட்டி மாறி உட்காருமாறு நாகராஜ் சொன்னதாகவும் அன்றைய தினம் இறங்கி சென்றுவிட்டதாகவும் மறுநாள் பேளூர் பஸ் ஸ்டாப்பில் வைத்து எதிரிகள் வண்டியை மறித்து கதவினை திறந்து அ.சா.1 நாகராஜை கீழே இழுத்து போட்டு தொன்னையால் தாக்கியதாகவும் எதிரி சீனிவாசு தொன்னையால் அ.சா.1-யை தாக்கியதாகவும், முரளியும் அவரது மாமாவும் அவர் பெயர் மட்டும் தான் தெரியும் என்றும் அந்த இடத்தில் நான்கு பேரும் சேர்ந்து அ.சா.1-யை அடித்ததாகவும் தான் வண்டியின் உள்ளே இருந்ததாகவும் எதிரிகள் நான்கு பேரும் அ.சா.1-யை தாக்கியதாகவும் நாகராஜ் மருத்துவமனைக்கு சென்றார் என்றும் வேறொரு ஓட்டுநர் வந்து தங்களை கம்பெனியில் விட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ஈ) அ.சா.4 திருமதி. சரசம்மா தனது சாட்சியத்தில், அ.சா.1 நாகராஜ் தனக்கு தெரியும் என்றும் எதிரிகள் நான்கு பேரும் தனக்கு தெரியும் என்றும் 20.09.2015-ம் தேதி இரவு 08.00 மணியளவில் முரளி வண்டியில் வரும் போது பெண்கள் இரக்கையில் உட்கார்ந்தான் என்றும் அதனால் அ.சா.1 நாகராஜ் சீட்டு மாறி உட்காருமாறு சொன்னதாகவும் அன்று வாய் தகராறு ஏற்பட்டு முரளி இறங்கி சென்று விட்டதாகவும் மறுநாள் 21.09.2015-ம் தேதி காலை தாங்கள் வண்டியில் வரும் போது பேளூர் பஸ் ஸ்டாப்பில் வைத்து எதிரி முரளி நின்று கொண்டு வண்டியை மறித்து அ.சா.1 நாகராஜ் கன்னத்தில் அடித்தார் என்றும் அப்போது தனக்கு போன் வந்தது என்றும் தான் போன் பேசியதற்கு எதிரிகள் தன்னை திட்டினார்கள் என்றும் தாங்கள் அங்கிருந்து வேலைக்கு சென்றுவிட்டதாகவும் நாகராஜ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் எதிரிகளுக்கு எதிரான அம்சங்களிலிருந்தும் கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் விசாரணை செய்த போது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

6. இந்த வழக்கின் புகார்தாரர் அரசு தரப்பில் அ.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1-ன் மூலம் புகாரானது அரசு தரப்பில் அ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் 20.09.2015-ம் தேதி பணி முடிந்து செல்லும் சமயத்தில் முரளி என்பவர் பெண்கள் அமரும் பக்கத்திலேயே அமர்ந்ததாகவும் அதை அ.சா.1 கண்டித்த போது மறுநாள் காலை 08.00 மணியளவில் அ.சா.1 கம்பெனி பஸ்ஸினை தொட்டபேளூருக்கு ஓட்டி சென்ற போது தொட்டபேளூர் முன்பு வெங்கடேசப்பா, தொட்டண்ணைய்யா, கெஞ்சப்பா, முரளி ஆகியோர் வந்து வாகனத்தை தடுத்து நிறுத்தி அ.சா.1-யை தகாத வார்த்தைகளால் பேசி சட்டையை பிடித்து

இழுத்து கை, கால், கன்னம், நெஞ்சின் மீது அடித்ததாகவும் முரளி என்பவர் கல்லால் தோள்பட்டையில் அடித்ததால் கன்றிய காயம் ஏற்பட்டது என்றும் தொட்டண்ணைய்யா, வெங்கடேசப்பா, கெஞ்சப்பா ஆகியோர் தொன்னையால் அடித்ததால் இடது முட்டி, தொடை ஆகிய இடங்களில் வீக்கக் காயம் ஏற்பட்டது என்றும் முரளி என்பவர் தொன்னையை காட்டி கையில் வைத்து கொண்டு கொலை செய்து விடுவேன் என்று மிரட்டியதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சீனிவாஸ் என்பவரும் சேர்ந்து தகாத வார்த்தைகளால் பேசி மிரட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். புகாரில் சீனிவாஸ் என்பவர் உடன் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. அதேபோல் அ.சா.1 மருத்துவரிடம் தெரிவித்த விபத்து பதிவேடு நகலிலும் 4 நபர்கள் தாக்கியதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், அ.சா.1-ன் விசாரணை வாக்குமூலத்தில் அடிபட்டு மயக்கத்தில் இருந்ததால் மேற்படி சீனிவாசன் பற்றி கூறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, 5 பேரும் தன்னை சேர்ந்து திட்டி அடித்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அ.சா.1 சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான காயச் சான்றிதழில் நோயாளியானவர் சுயநினைவில் இருந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 21.09.2015-ம் தேதியில் சிகிச்சை எடுத்த பின்னர் 25.09.2015-ம் தேதியில் அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் அளித்துள்ளது தெரிய வருகிறது. எனவே, சம்பவம் நடைபெற்று 4 நாட்கள் காலதாமதமாக புகார் அளிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. அ.சா.1-யே காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் அளித்துள்ளபடியால் மேற்படி சமயத்தில் அ.சா.1 மயக்கமாக இருந்திருக்க வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மருத்துவரிடம் 4 பேர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் அடிப்படையிலேயே புகார் வாக்கு மூலமும் அளிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவ சமயத்தில் 5 பேர்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளது புகாரில் உள்ள சங்கதிகளுக்கு முரணாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

7. இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக காட்டப்பட்டுள்ள சிவநேசன் என்பவர் அரசு தரப்பில் அ.சா.2 ஆக சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரி வெங்கடேஷ் அடித்ததை தான் பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், அ.சா.2-ம் தனது சாட்சியத்தில் 5 பேர் வந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அதேபோல், அ.சா.1-யை யார்,யார் என்னென்ன இடத்தில் தாக்கினார்கள் என்பது குறித்தும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

8. இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக காட்டப்பட்டுள்ள யசோதா என்பவர் அரசு தரப்பில் அ.சா.3 ஆக சாட்சியமளித்துள்ளார். அ.சா.3-ம் தனது சாட்சியத்தில் சம்பவத்திற்கு முதல் நாள் முரளி என்பவரை மாறி உட்காருமாறு அ.சா.1 சொன்னதாகவும் மறுநாள் எதிரிகள் வந்து கீழே இழுத்து போட்டு தொன்னையால் தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரி சீனிவாஸ் தொன்னையால் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், புகாரில் மேற்படி சீனிவாஸ் என்பவருடைய பெயரானது குறிப்பிடப்படவில்லை. மேலும், அ.சா.1-ன்

விசாரணை வாக்கு மூலத்திலேயே முரளி, சீனிவாஸ் ஆகியோர் கல்லால் அடித்ததாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தொட்டண்ணையா, கெஞ்சப்பா, வெங்கடேஷ் ஆகியோர்கள் தான் தொன்னையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அ.சா.3-ன் சாட்சியமும், அ.சா.1-ன் வாக்கு மூலத்திற்கு எதிராக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

9. இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக காட்டப்பட்டுள்ள சரஸ்வதி என்பவர் அரசு தரப்பில் அ.சா.4 ஆக சாட்சியமளித்துள்ளார். அ.சா.4-ம் தனது சாட்சியத்தில் சம்பவத்திற்கு முதல் நாள் அ.சா.1, 1-வது எதிரி முரளியுடன் வாய் தகராறு ஏற்பட்டது குறித்து குறிப்பிட்டுள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில் 1-வது எதிரி முரளி கன்னத்தில் அடித்ததை மட்டும் குறிப்பிட்டுள்ளார். மற்ற எதிரிகள் இருந்தது குறித்தோ, தொன்னையால் அடித்தது குறித்தோ, கல்லால் அடித்தது குறித்தோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் 18.07.2017-ம் தேதியில் அளிக்கப்பட்டு பின்னிட்டு சாட்சிகளை ஆஜர்படுத்த அழைப்பாணையானது அளிக்கப்பட்டு 24.07.2018 வரை ஒரு வருட காலமாக அரசு தரப்பில் பிற சாட்சிகளின் சாட்சியமானது ஆஜர்படுத்தப்படவில்லை. எனவே, 24.07.2018-ம் தேதியில் அரசு தரப்பு சாட்சியமானது இந்த நீதிமன்றத்தால் தன்னிச்சையாக முடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பின்னிட்டு அரசு தரப்பில் சாட்சியம் அளிக்கவும், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை நிரூபிக்கவும் அரசு தரப்பில் போதுமான ஆவணங்களும், சாட்சியங்களும் அளிக்கப்படவில்லை. இந்த வழக்கில் வழக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளரும், அ.சா.1-க்கு சிகிச்சையளித்த மருத்துவரும் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் 5 எதிரிகள் ஒன்றாக சேர்ந்து கலகம் செய்யும் நோக்கத்தோடு குற்றம் புரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், புகாரிலும், அ.சா.1 மருத்துவரிடம் தெரிவித்துள்ள காயச் சான்றிதழிலும் 4 நபர்கள் தாக்கியதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே, மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் அ.சா.1 மயக்கமாக இருந்ததாக காயச் சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்பதால் மருத்துவரிடமும், புகார் வாக்கு மூலத்திலும், புகாரிலும் தெரிவித்துள்ளதற்கு முரணாக விசாரணை வாக்குமூலமானது பதிவு செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, அரசு தரப்பில் புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் சம்பவத்தன்று எதிரிகள் தாக்கியதாகவும், அ.சா.1-க்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்தும் அரசு தரப்பில் ஐயமற நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், புகாரிலும், அ.சா.1-ன் சாட்சியத்திற்கும், அ.சா.1 மருத்துவரிடம் தெரிவித்து காயச் சான்றிதழ் பதிவு செய்த விவரமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே சந்தேகத்தின் பலனானது எதிரிகளுக்கு சாதகமாக வழங்கப்படலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

இறுதியாக, எதிரிகளை இதச பிரிவுகள் 147,341,294(பி),324,506(2) இதச உ/இ.149-ன் கீழ் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்தத் தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்து கணினியில் வடிவமைக்கப்பட்டு என்னால் பிழை நீக்கி சரி செய்யப்பட்டு 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01-ம் நாள் இன்று அவையறிய பகரப்பட்டது.

ஒம்./ எம். மேகலா மைதிலி,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், தேன்கனிக்கோட்டை.

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

1. அ.சா.1- திரு. நாகராஜ்
2. அ.சா.2- திரு. சிவனேசன்
3. அ.சா.3- திருமதி. யசோதா
4. அ.சா.4- திருமதி. சரஸ்வதி

அரசு தரப்பு சான்றாவணங்கள்:

1. அ.சா.ஆ.1 —— புகார் மனு

**வழக்கு சொத்து:** இல்லை

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவாணங்கள்: இல்லை

**குறிப்பு:**

1. எதிரிகள் ஆஜர்
2. எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நீதிமன்றத்தில் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவின் சிறு குறிப்பு காவல் துறைக்கு வழங்கப்பட்டது.

ஒம்./ எம். மேகலா மைதிலி,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், தேன்கனிக்கோட்டை.

//உண்மை நகல்//

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், தேன்கனிக்கோட்டை.